DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC** 52/2024 |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : டாக்டர். நான்சி டோரா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி தெரிவிக்கும் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பதிவுசெய்கிறது.**

முதல்விசாரணை:

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நுண்கதிர் நோய்காண் துறையில் பேராசிரியராகவும், துறை தலைவராகவும் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.07.2011 அன்று உதவி மருத்துவராக இதே மருததுவமனையில் பணிபுரிந்த போது வேளாங்கண்ணி என்ற 25 வயதுடைய நபருக்கு இடது காலில் நுண் கதிர் படங்கள் எடுக்கப்பட்டன. அதை நான் ஆய்வு செய்த போது, மேற்படி நபரின் இடது கால் டிபியா என்ற எலும்பு நொறுங்கிய நிலையில் காணப்பட்டது. அதே காலில் பிபுலா என்ற எலும்பின் கீழ்பாகம் முறிந்த நிலையில் காணப்பட்டது. அந்த நுண்கதிர் படத்தின் எண்.3796 ME ஆகும். மேற்படி நுண்கதிர் படமானது DME பிறப்பித்த 2014 உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டு விட்டது.

மேற்படி 2014 வருடத்தில் **DME பிறப்பித்த உத்தரவு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்த போது காயம்பட்டநபருக்கு எடுக்கப்பட்டதாக நான் முதல் விசாரரணயில் கூறியுள்ள நுன் கதிர் படங்களை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த நுண்கதிர் படங்கள் எங்களிடத்தில்தான் இருந்தன. பொதுவாக குற்றவியல் வழக்குகளில் எடுக்கப்படும் காயம்பட்ட நபருக்கான நுண்கதிர் படங்கள் போலீசாரிடம் கொடுக்கப்பட வேண்டும் என்பது நடைமுறை என்றால், சரியல்ல. மேற்கூறியவாறு நுண்கதிர் படங்கள் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவிக்கும் உத்தரவு ஏதேனும் என்னிடம் உள்ளதா என்றால் போலீசாரிடம் அவசியம் ஒப்படைக்க வேண்டும் என்பதற்கும், ஒப்படைக்கப்பட வேண்டாம் என்பதற்கும் குறிப்பிட்ட உத்தரவு எதுவும் கிடையாது.

**மறுவிசாரணை இல்லை.**